நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# மாம்பழ சீசன் துவங்கியது: கிலோ ரூ. 50

First Published : 29 Apr 2011 01:15:06 AM IST



வெயில் காலம் என்றாலே நினைவுக்கு வருவது மாம்பழம். சீசன் தொடங்கிவிட்ட நிலையில் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் மாம்பழம் விற்கும் பெண்.

சென்னை, ஏப். 28: சென்னையில் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளது. ஒரு கிலோ பங்கனபள்ளி ரூ. 50 முதல் ரூ. 60 வரை விற்பனையாகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மாம்பழ சீசன் மார்ச் இறுதியில் தொடங்கி ஜூன் மாதம் வரை இருக்கும். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மத்தியில்தான் சீசன் தொடங்கியது. சென்னைக்கு நாள்தோறும் 250 டன் வரை மாம்பழம் வரத்து உள்ளது. இதில் 80 சதவீதம் அளவுக்கு பங்கனபள்ளி வகை மாம்பழம் வருகிறது. மீதம் 20 சதவீத அளவுக்கு அல்போன்ஷா, ஜவ்வாரி, இமாம்பஷந்த், காளபாடி, ருமானி, மனோ ரஞ்சிதம், செந்தூரம் உள்ளிட்ட மாம்பழங்கள் வருகின்றன.

சென்னைக்கு வரும் 250 டன் மாம்பழங்களில் 80 சதவீதம் கோயம்பேடு சந்தைக்கும், மீதம் உள்ள 20 சதவீத மாம்பழங்கள் தியாகராயநகர், சைதாப்பேட்டை, வில்லிவாக்கம், பாரிமுனை மற்றும் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலையோர கடைகளுக்கும் வருகின்றன. மாம்பழங்கள் கார்பைட் கற்களால் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்படும் நடைமுறை தமிழகம் முழுவதும் உள்ளது. இது உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் என்பதால் உள்ளாட்சி அமைப்புகளின் சுகாதாரத்

துறை அதிகாரி இவற்றை பறிமுதல் செய்து அழித்து வருவது வாடிக்கை. இந்த சீசனிலும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கார்பைட் மூலம் பழுக்க வைப்பதாக பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

எத்திலின் நீர்ம வேதி பொருள்: இதனால் இப்போது சென்னை கோயம்பேடு சந்தையில் எத்திலின் நீர்ம வேதி பொருளை வைத்து மாம்பழங்களை பழுக்க வைக்கும் முறை கையாளப்படுகிறது. இதனால் உடலுக்கு தீங்கு ஏதும் இல்லை என்று வியாபாரிகள் கூறுகின்றனர். பெரிய அளவில் மாம்பழ வியாபாரம் செய்யும் வியாபாரிகள் "ரைப்பினிங்' என்ற குளிரூட்டும் முறையில் எத்திலின் வாயு மூலம் செயற்கை முறையில் பழுக்க வைக்கின்றனர்.

விலை நிலவரம் (ஒரு கிலோ): பங்கனபள்ளி முதல் ரகம் ரூ. 50 முதல் ரூ. 60, 2-ம் ரகம் ரூ. 35 முதல் ரூ. 50, 3-ம் ரகம் ரூ. 30 முதல் 40, அல்போன்ஷா முதல் ரகம் ரூ. 75 முதல் ரூ. 100, 2-ம் ரகம் ரூ. 65 முதல் ரூ. 75, ஜவ்வாரி ரூ. 50, இமாம் பஷந்த் முதல் ரகம் ரூ. 80, 2-ம் ரகம் ரூ. 60 முதல் ரூ. 70. செந்தூரம் முதல் ரகம் ரூ. 35 முதல் ரூ. 40, 2-ம் ரகம் 25 முதல் ரூ. 30.

கோயம்பேடு மாம்பழ மொத்த வியாபாரி சலீம் கூறியது: கடந்த ஆண்டோடு ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மாம்பழ வரத்து குறைவாக உள்ளது கடந்த ஆண்டு இதே நேரத்தில் நாள் ஒன்றுக்கு 450 டன் வரை மாம்பழங்கள் சந்தைக்கு வந்தன. இதனால் இப்போது மாம்பழத்தின் விலை சற்று அதிகமாக உள்ளது. இப்போது அதிக அளவில் பங்கனபள்ளி மாம்பழம் வருகின்றது. சென்னையில் அதிகம் விற்பனையாவது இந்த வகை மாம்பழம்தான்.

முதல் ரக மாம்பழங்களை அதிக அளவில் பழமுதிர் சோலை, சுயசேவை பிரிவு அங்காடி நடத்துபவர்கள் அதிக அளவில் வாங்கி செல்கின்றனர். இப்போது வரும் மாம்பழம் தேவைக்கு குறைவாகத்தான் இருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் அதிக அளவில் மாம்பழம் வரத்து இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார் சலீம்.

**கொள்முதல் நிலையத்தில் தேங்கிக் கிடக்கும் நெல் மூட்டைகள்**

First Published : 29 Apr 2011 02:32:13 AM IST



நெல் மூட்டைகளை அடுக்க இடம் இல்லாததால் வெட்ட வெளியில் குவித்து வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகள்.

காஞ்சிபுரம், ஏப். 28: காஞ்சிபுரம் அருகே திருமுக்கூடல் கிராமத்தில் உள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் கடந்த இரு மாதங்களாக கொள்முதல் செய்யப்படாமல் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன.

இந்த நெல் மூட்டைகள் திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்ததால் மழையில் நனைந்து முளைப்பு கட்டி சேதமடைந்துள்ளன.

வாலாஜாபாத் அருகே உள்ள திருமுக்கூடல் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் ஒன்று உள்ளது. கடந்த 8 ஆண்டாக இயங்கி வரும் இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் மூட்டைகளை பாதுகாத்து வைப்பதற்கான கிடங்குகள் எதுவும் இல்லை.

இந்த நெல் கொள்முதல் நிலையத்துக்கு சித்தாலப்பாக்கம், சிறுமயிலூர், அருங்குன்றம், பட்டா, சாலவாக்கம், பொற்பந்தல், ஆனம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து விவசாயிகள் நெல்லை கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு கொண்டு வரப்படும் நெல்மூட்டைகள் கிடங்குகள் இல்லததால் திறந்த வெளியில் வைக்கப்படுகின்றன.

இந்த கொள்முதல் நிலையத்துக்கு கடந்த இரு மாதங்களாக கொண்டு வரப்பட்ட நெல் மூட்டைகளை கொள்முதல் செய்யப்படாமல் உள்ளன. இது குறித்து விவசாயிகள் அதிகாரிகளிடம் கேட்டபோது, "அரசு இந்த கொள்முதல் நிலையத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை' என்று கூறியதாக தெரிகிறது.

இந்நிலையில் திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மற்றும் நெற்குவியல்கள் திடீரென்று பெய்த கோடை மழையில் முற்றிலுமாக நனைந்துவிட்டன. இதனால் அங்கு வைக்கப்பட்டிருந்த நெல் முழுவதும் முளைப்பு கட்டி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது தங்கள் நெல்லுக்கு உரிய விலை கிடைக்குமா? என்று விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இது குறித்து திருமுக்கூடல் ஊராட்சி மன்றத் தலைவர் மகேந்திரனிடம் கேட்டபோது, "இங்கு வரும் நெல் மூட்டைகளை உடனே கொள்முதல் செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மனு அளித்தோம்.

ஆனால் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகள் நெல் கொண்டு வந்தால் உடனடியாக கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல்லை கொள்முதல் செய்வதற்கு தேவையான நிதியை அரசு ஒதுக்க வேண்டும்' என்றார்.

இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் இயக்கத்தின் செயலர் அருங்குன்றம் தேவராஜ் கூறுகையில்:

"திருமுக்கூடல் மட்டும் இன்றி காவாந்தண்டலம், அரும்புலியூர், தென்னேரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளின் நெல் மூட்டைகள் 35 நாள்கள் முதல் 70 நாள்களை வரை தேங்கிக் கிடக்கின்றன.சில வியாபாரிகளிடம் நெல் வாங்குவதற்கு காட்டும் ஆர்வத்தை விவசாயிகளிடம் அதிகாரிகள் காட்டுவதில்லை.

மேலும் நெல் மூட்டை ஒன்றுக்கு முறைகேடாக விவசாயிகளிடம் ரூ.23 வசூல் செய்யும் நடவடிக்கையிலும் அங்குள்ள ஊழியர்கள் சிலர் ஈடுபடுகின்றனர். இவற்றை தடுத்து விவசாயிகளின் நெல்லை விரைவில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

**கோடை மழை: அறுவடைக்கு தயாராக இருந்த 3 ஆயிரம் ஏக்கர் நெல் சேதம்**

First Published : 29 Apr 2011 02:55:14 AM IST



வாலாஜாபாத் அருகே நெய்குப்பம் பகுதியில் மழையால் சாய்ந்து கிடக்கும் நெற்பயிர்கள்.

காஞ்சிபுரம், ஏப். 28: காஞ்சிபுரம் மாவட்டத்தில் திடீரென பெய்த கோடை மழையால் அறுவடைக்குத் தயாராக இருந்த 3 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்தன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆண்டுக்கு 2 லட்சம் ஏக்கரில் நெற்பயிர் விளைகிறது. கோடைகாலத்தில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் நெற்பயிர் செய்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன.

இந்த சிரமங்களுக்கு நடுவிலும் விவசாயிகள் மாவட்டம் முழுவதும் 25 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிர் செய்திருந்தனர்.

இந்நிலையில் தாமல், அருங்குன்றம், சித்தாலப்பாக்கம், மாகரல் உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் திடீரென்று பெய்த கோடை மழையால் நெற்பயிர்கள் சாய்ந்து சகதியில் சிக்கி விட்டன.

இவ்வாறு சாய்ந்த நெற்பயிர்கள் நிலத்திலேயே முளைக்கத் தொடங்கியுள்ளன. இதனால் மாவட்டம் முழுவதும் 3 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளதாக விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

மழை ஓய்ந்து வயலில் இருந்த தண்ணீர் ஓரளவுக்கு காய்ந்துள்ளதால் வியாழக்கிழமை சில இடங்களில் மட்டும் விவசாயிகள் அறுவடையை தொடங்கியுள்ளனர்.
நெல் முளைத்து இருப்பதால் அறுக்கும் கூலியாவது தங்களுக்கு தேறுமா? என்று விவசாயிகள் வேதனை தெரிவித்து வருகின்றனர்.

**மழையால் மீன் வரத்து அதிகம்: நாட்டுப் படகு மீனவர்கள் மகிழ்ச்சி**

First Published : 29 Apr 2011 06:41:14 AM IST

திருவாடானை, ஏப். 28: தொண்டி பகுதியில் தொடர் மழையால் மீன் வரத்து அதிகம் காணப்படுவதால் மீனவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.
தொண்டி, நம்புதாளை, முள்ளிமுனை, காரங்காடு, உப்பூர், மோர்பண்ணை போன்ற கடற்கரை கிராமங்களில் நாட்டு படகு மீனவர்கள் 500-க்கும் மேற்பட்டோர் மீன்
பிடித் தொழில் செய்து வருகின்றனர்.
தற்போது விசைப்படகு மீனவர்களுக்கு மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால் நாட்டு படகு மீனவர்கள் மீன் பிடித்து வருகின்றனர்.
இந்நிலையில் கடந்த ஒரு மாத காலாமாக கடும் வெயில் வாட்டி வந்தநிலையில் கடந்த சில நாள்களாக தொடர் மழை காரணமாக மீன்கள் அதிகம் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
இதுகுறித்து தொண்டியைச் சேர்ந்த மீனவர் கோபிநாத் கூறுகையில் கடும் வெயில் வாட்டி வந்த நிலையில் தண்ணீரில் வெப்பம் அதிகமாகி மீன்கள் அதிக ஆழத்துக்குச் சென்றுவிடும்.
தற்போது மழை பெய்வதால் தண்ணீர் குளிர்ச்சி அடைந்து மேலே வருவதால் வலையில் மீன்கள் அதிகம் பிடிபடுகிறது. கோடைகாலத்திலும் அதிக மீன்கள் பிடிபடுவது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்தார்.

தினமலர்

**விலை கிடைக்காமல் வீதியில் வீசப்பட்ட மலர்கள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:25 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் செண்டு மல்லி பூக்கள் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு சென்ற பூக்களை சாலையோரத்தில் மூட்டை, மூட்டையாக கொட்டி செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நிலவும் நல்ல மண்வளத்தையும், காலநிலையும் பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவில் பூ சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ரோஜா, சாமந்தி, செண்டுமல்லி மற்றும் பல்வேறு அலங்கார பூஞ்செடிகளை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இவற்றில் ஓசூர் ரோஜா, சாமந்தி பூக்களுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. சாந்தி பூ ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை மட்டுமே சாகுபடி செய்ய முடியும். மற்ற காலங்களில் சாகுபடி செய்தால் பூக்கள் வராது. அதனால், சாமந்தி பூக்கள் சாகுபடி இல்லாத காலத்தில் அவற்றிற்கு பதிலாக அதேபோன்ற தோற்றம் கொண்ட செண்டுமல்லை பூக்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். ஓசூர் தாலுகாவில் சின்னபேளகொண்டபப்ள்ளி, சானமாவு, ஜி.மங்கலம், பாரந்தூர், முதுகானப்பள்ளி, பாகலூர், பேரிகை உள்ளிட்ட பகுதியில் 300 ஏக்கரில் செண்டுமல்லி சாகுபடி ஆண்டு முழுவதும் நடக்கிறது. கோவில் விழா,பொது விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் விழா மேடைகளில் தோரண மாலை கட்டுவதற்கும், அலங்காரம் செய்வதற்கும் செண்டு மல்லி அதிகளவு பயன்படுகிறது. சாமந்தி பூ செடிகள் சாகுபடி செய்த 60 நாளில் பூக்கள் மகசூல் பெறலாம். மழை காலத்தில் சாமந்தி பூக்களில் தண்ணீர் ஏறி கெட்டுவிடுவதால், இந்த பூக்களை விற்பனை செய்ய முடியாது. அதனால், மழை காலத்தில் பாலிகவுசில் விவசாயிகள் செண்டுமல்லி பூக்களை சாகுபடி செய்கின்றனர். கடந்த மாதம் வரை செண்டு மல்லி பூக்களுக்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்தது. தற்போது உற்பத்தி அதிகரிப்பாலும், மழை சேதத்தாலும் செண்டுமலை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு கிலோ செண்டுமல்லி, 10 முதல், 15 ரூபாய் வரை தான் விற்பனையாகிறது. ஒரு கிலோ செண்டு மல்லி உற்பத்தி செய்ய பராமரிப்பு செலவு, கூலி ஆட்கள் சம்பளம் உள்பட, 15 முதல், 20 ரூபாய் வரை செலவாகிறது. ஆனால், கிலோ, 10 ரூபாய்க்கு விற்பனையாவதால், விவசாயிகள் மார்க்கெட்டுக்கு கொண்டு வந்த பூக்களை விற்பனை செய்யாமல் சாலையோரங்களில் மூட்டை, மூட்டையாக வீசி

சென்று வருகிறது. செடிகளில் பறிக்காமலும் உள்ளனர். இதுகுறித்து ஓசூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் காளிப்பன் கூறியதாவது: செண்டுமல்லி பூக்கள் மஞ்சள், ஆரஞ்சு மற்றும் சிவப்பு நிறங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. மஞ்சள் நிற செண்டு மல்லி பூக்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உண்டு. செண்டுமல்லி பூக்கள் எடை குறைவு என்பதால், ஒரு கிலோ பூக்கள் வாங்கினாலே அதிகளவு பூக்கள் கிடைக்கும். அதனால், அதிக தோரணம் கட்டம் விழாக்களில் செண்டுமல்லி பூக்களை பயன்படுத்துகின்றனர். தற்போது மழை பெய்ததால் பூக்கள் தரமாக உற்பத்தியாகுவதில்லை. விலையும் போதுமானதாக இல்லை. மே மாதத்தில் செண்டுமல்லி விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மாம்பழம் பழுக்க ரசாயன கல் பயன்பாடு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:18 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழம் விற்பனை துவங்கிய நிலையில் பழங்களை பழுக்க வியாபாரிகள் ரசாயனகற்களை பயன்படுத்துவதை சுகாதார துறையினர் கண்காணித்து தடுத்து நிறுத்த வேண்டும்' என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்தமிழகத்தில் மா உற்பத்தியில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதல் இடத்தில் உள்ளது. மாவட்டத்தில் போச்சம்பள்ளி, ஜெகதேவி, சந்தூர், தொகரப்பள்ளி, மத்தூர், ராயக்கோட்டை, வேப்பனபள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் 40,000 ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வழக்கமாக ஏப்ரல் மாத துவக்கத்தில் மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துவிடும். இந்தாண்டு பருவ மழை சுமாராக பெய்ந்ததால் மா விளைச்சல் சீராகி தற்போது மாம்பழங்கள் விற்பனைக்கு வந்தது. குறிப்பாக முன்பருவ ரகங்களான செந்தூரா, பீத்தர், வகை மாம்பழங்கள் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. மேலும், மல்கோவா, பங்கனப்பள்ளி, ருமானியா போன்ற நாட்டி வகைகளும் விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. மாம்பழ சீசன் துவக்கத்தில் அதிக விலை இருக்கும் என்பதால் விவசாயிகள் பலர் நன்றாக பெருக்கமடையாத மாங்காய்களை பறித்து விற்பனை செய்ய துவங்கி விட்டனர். மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் பல இடங்களில் வீசிய சூறாவளி காற்றால் மாங்காய்கள் உதிர்ந்து வியாபாரிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. வரும் காலங்களில் சூறாவளி காற்று அதிகரிக்கும் என்பதால் மாங்காய்களை முன்கூட்டியே அறுவடை செய்ய வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த காலத்தில் மாங்காய்கள் மரங்களில் பழுத்த பின்னரே தோப்புகளில் இருந்து மா பறிக்கப்படும். இவ்வாறு பறித்த மாங்காய்களை வியாபாரிகள் பெரிய இருட்டறையில் வைக்கோல் போட்டு புகை மூட்டி பழுக்கவைப்பார்கள். இருட்டறையில் வைக்கோல் கொண்டு பழுக்க வைக்கும் போது மாங்காய்கள் அனைத்தும் ஒரே சமயத்தில் பழுப்பதில்லை. மேலும், பறிக்கப்பட்ட காய்கள் பழுக்க குறைந்தது ஒரு வார காலத்திற்கு

காத்திருக்வேண்டும். வைக்கோல் கொண்டு பழுக்க வைக்கப்படும் பழங்கள் சுவை சுமாராக இருந்தாலும் இவ்வகை பழங்களை பொதுமக்கள் வாங்கி சாப்பிடும் போது எவ்வித பாதிப்பும் இல்லாமல் இருந்தனர். தற்போது, வியாபாரிகள் மாங்காய்களை சீராக பழுக்க வைக்கவும், இனிப்பு தன்மை அதிகம் கிடைக்க வசதியாக "கார்ஃபைட்' என்ற ரசாயன கற்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்டு விற்பனை செய்ய துவங்கியுள்ளனர்.
குறிப்பாக கிருஷ்ணகிரி-திருவண்ணமாலை தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி- சேலம் தேசிய நெடுஞ்சாலையில் சாலையோரம் மாந்தோப்புகளின் அருகில் தற்காலிக கடைகளை அமைத்து இவ்வாறான பழங்களை விற்பனை செய்து வருகின்றனர். மாங்காய்கள் ரசாயனக்கல் கொண்டு பழுக்க வைக்கும் போது குறைந்த நாட்களில் பழமாகும் என்பதால் இம்முறையை அதிக வியாபாரிகள் பின்பற்ற துவங்கியுள்ளனர். மாம்பழம் பழுக்க இந்த முறை எளிய வழியாக இருந்தாலும் ரசாயனக்கல் கொண்டு பழுக்க வைக்கப்படும் பழங்களை பொதுமக்கள் சாப்பிடும் போது வயிற்று வலி, வயிற்று போக்கு ஆகிய நோய்கள் ஏற்படும் என்று டாக்டர்கள் எச்சரித்து வருகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் ரசாயன கற்கள் கொண்டு பழுக்க வைக்கப்படும் பழங்களை சாப்பிடுவதால் வயிறு சம்மந்தமான நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது. "உடலுக்கு தீங்கு விளைவிக்கும் ரசாயனக்கற்கள் கொண்டு மாம்பழம் பழுக்க வைக்கப்படுவதை சுகாதாரத் துறை அதிகாரிகள் கண்காணித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விளைச்சல் அதிகரிப்பால் பெல்லாரி வெங்காயம் விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:20 IST

பொள்ளாச்சி : விலை உயர்வால் நுகர்வோர் கண்களில் கண்ணீர் வரவழைத்த, பெல்லாரி வெங்காயம் விளைச்சல் அதிகரிப்பால் விலை சரிந்து விட்டது. இதனால், பொள்ளாச்சி மார்க்கெட்டில் பெல்லாரி வெங்காயம் விற்பனைக்காக குவிந்து கிடக்கிறது.பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் பெல்லாரி வெங்காய வியாபாரிகள் கூறியதாவது: மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து பொள்ளாச்சிக்கு பெல்லாரி வெங்காயம் வரத்துள்ளது. மூன்று மாதத்திற்கு முன்பு வரையிலும் வரத்து குறைவாக இருந்ததால் விலை அதிகமாக இருந்தது. தற்போது தினமும் 15 டன் வீதம் 10 லோடு பெல்லாரி வெங்காயம் வரத்துள்ளது. அதில், நான்கு லோடு கேரளாவுக்கு செல்கிறது. மீதமுள்ள பெல்லாரி பொள்ளாச்சி, வால்பாறை பகுதிகளின் தேவையை பூர்த்தி செய்கிறது. பெல்லாரி வெங்காயம் 70 நாள் பயிர் என்பதால், தற்போது மகசூல் அதிகரித்து வரத்து அதிகமாக உள்ளது. இதனால் பெல்லாரி வெங்காயம் விலை சரிந்துள்ளது. மொத்த விற்பனை விலையாக கிலோவுக்கு 8 ரூபாய் விலை கொடுக்கப்படுகிறது. சில்லரை வர்த்தகத்தில் 10 ரூபாய்க்கு

பெல்லாரி விற்கப்படுகிறது. பெல்லாரி விலை மூன்று மாதத்தில் தலைகீழ் மாற்றமாகியுள்ளது என்றனர்.

**விதை வெங்காயம் விலை கிடுகிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:37 IST

பொங்கலூர் : விதை வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதால், சின்ன வெங்காயம் நடவு செய்ய ஆர்வமாய் இருந்த விவசாயிகள் கலக்கமடைந்து உள்ளனர்.சின்ன வெங்காயம் நடவு செய்ய வைகாசி பட்டம் சிறந்த பட்ட
மாகும். நடவு சீசன் ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே இருப்பதாலும், இந்த சீசனில் அதிகபட்டமாக மழை பெய்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருவதாலும் பொங்கலூர் பகுதியில் பல விவசாயிகள் விதை வெங்காயம் கொள்முதல் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் போட்டி போட்டு கொண்டு கொள்முதல் செய்ய ஆரம்பித்துள்ளதால், விதை வெங்காயத்திற்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.பொங்கலூர் பகுதியில் அவிநாசிபாளையம், சம்பந்தம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான வெங்காய குடோன்கள் செயல்படுகின்றன. இங்குள்ள வியாபாரிகள் விதை வெங்காயத்தை விற்பனைக்கு கொண்டு வந்த சில மணி நேரங்களில் விற்று தீர்ந்து விடுகிறது. சில விவசாயிகள் திருச்சி, துறையூர் போன்ற வெளியூர்களுக்கு சென்று வாங்கி வருகின்றனர். இரண்டாம் தர விதை வெங்காயம் ஒரு கிலோ 35 ரூபாய்க்கு விற்பனையாகிறது. முதல் தரம் 40 ரூபாய் வரை விற்பனையாகிறது.தற்போது தான் அறுவடை சீசன் முடியும் தருவாயில் உள்ளது. நல்ல சீசனில் முதல் தர வெங்காயத்தின் விலை கிலோ 12 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது கிலோ 22 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்த வெங்காயத்திற்கு குறைந்த விலையும், அடுத்த போக சாகுபடிக்கு விதை வெங்காயம் கொள்முதல் செய்யும் போது, விலை தாறுமாறாகவும் விற்பனையாவதால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.அதிக விலைக்கு விதை வெங்காயம் கொள்முதல் செய்ய விருப்பம் இல்லாத பல விவசாயிகள் உளுந்து, பாசிப்பயறு, பீட்ரூட் உள்ளிட்ட மாற்றுப் பயிர்களுக்கு மாறும் முடிவில் உள்ளனர். இதனால் அடுத்த சீசனில் வெங்காய உற்பத்தி பரப்பு குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

**ஆடு வளர்ப்பு தொழிலில் மக்கள் ஆர்வம் குறைவு; விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,00:09 IST

குஜிலியம்பாறை : கிராமப்புறங்களில், ஆடு வளர்ப்பு தொழிலில், மக்களின் ஆர்வம் படிப்படியாக குறைந்து வருவதால், ஆட்டு கறி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் , விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. சமீப காலமாக, கால்நடை வளர்ப்பில், கறவை மாடுகளுக்கு தரும் முக்கியத்துவத்தை, மக்கள், வெள் ளாடு, செம்மறியாடு வளர் ப்பில் காட்டவில்லை. காரணம் ஆடுகளை, காடு, காடாக சென்று மேய்க்கும் அளவிற்கு, தற்போதைய மக்களிடையே பொறுமை இல்லை. விலை கிடைத்தாலும் ஆடு வளர்ப்பது குறைந்து வருகிறது.மலை சார்ந்த பகுதிகளில், மரக்கன்று வளர்ப்பின் முக்கியத்துவம் கருதி, அரசே, ஆடு, மாடு மேய்க்க கட்டுப்பாடு விதித்துள்ளது. மலையடிவார பகுதி மக்களை, கால்நடை வளர்ப்பில் இருந்து விடுவித்து, வேறு தொழில்கள் துவங்க கடன் வசதி செய்து தருவதும், ஆடு வளர்ப்பு குறைய ஒரு காரணம் என்கின்றனர். ஆடு வளர்ப்பு தொழிலில் ஆர்வம் குறைந்ததால், ஆடுகளின் எண்ணிக்கை குறைந்து ஆட்டின் விலை உயர்ந்துள்ளது.ஒரு நல்ல ஆட்டின் விலை ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.5 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. அதே அளவிற்கு, கறியின் விலையும் கிலோ ரூ.340 முதல், கிலோ ரூ.400 வரை விற்கப்படுகிறது. தேவை அதிகரித்து வரும் நிலையில், ஆடு வளர்ப்பு தொழில் நசிந்து வருவதால், இத்தொழிலை ஊக்கப்படுத்த போதிய கடன் வசதிகளை செய்து தர அரசு முன்வர வேண்டும்.

**உளுந்து பயிரில் பரவும் மஞ்சள் தேமல் நோய் கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:39 IST

திருநெல்வேலி, : நெல்லை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட உளுந்து பயிர்களில் பரவும் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த வேளாண்மை இணை இயக்குனர் அறிவுரை வழங்கியுள்ளார்.

வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம் அறிக்கை: நெல்லை மாவட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யும் பரப்பளவு கணிசமாக குறைந்துள்ளது. சாகுபடி செய்யப்பட்ட உளுந்து பயிர்களில் சீரிய முறையில் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படாததால் மஞ்சள் தேமல் நோய் பரவுகிறது. இது ஒரு வைரஸ் கிருமி. இந்த வைரஸ் கிருமிகள் உளுந்து பயிர்களை தொடர்ந்து தாக்குகிறது. மஞ்சள் தேமல் நோயால் தாக்கப்பட்ட இளம் உளுந்து பயிர்களின்

தளிர்களில் பச்சை, மஞ்சள் திட்டுகள் காணப்படும். நாளடைவில் மஞ்சள் தேமல் நோய் மற்ற செடிகளுக்கு பரவி விவசாயிகளுக்கு 100 சதவீத மகசூல் இழப்பு ஏற்படும்.

மஞ்சள் தேமல் நோயை பரப்பும் வைரஸ் ஒருவித வெள்ளை ஈயினால் ஒரு உளுந்து செடியில் இருந்து மற்றொரு செடிக்கு பரவி அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது. மஞ்சள் தேமல் நோய் தாக்கப்பட்ட உளுந்து பயிர்களை காப்பாற்ற முடியாது. மஞ்சள் தேமல் நோயால் தாக்கப்பட்ட உளுந்து செடிகளை பிடுங்கி அப்புறப்படுத்துவதன் மூலம் அருகேயுள்ள மற்ற செடிகளுக்கு நோய் பரவாமல் தடுக்கலாம். மஞ்சள் தேமல் நோயை பரப்பும் வெள்ளை ஈயை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு மஞ்சள் ஒட்டுப்பொறி 5 எண்ணம் உளுந்து பயிர்களுக்கு ஒரு அடிக்கு மேல் இருக்கும்படி அமைக்க வேண்டும். மோனா குரோட்டோபாஸ் அல்லது மீதைல் ஓ டெமட்டான் ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி மருந்து கலந்து தெளித்து மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம் தெரிவித்தார்.

**மானிய விலையில் விதைகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:17 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு அடுத்துள்ள வடசித்தூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் விதைகள் வழங்கப்படவுள்ளது என உதவி வேளாண்மை இயக்குனர் வடிவேலு தெரிவித்துள்ளார்.
கிணத்துக்கடவு பகுதிகளில் பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி மானாவாரி சாகுபடி செய்யலாம். இதற்கான விதைகள் 50 சதவீதத்தில் வடசித்தூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்படவுள்ளது. அதில், மக்காச்சோளம் விதைகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகள், தானியக்குதிர், உயிர் உரம் போன்றவகைள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு மானிய விலையில் விதைகள் மற்றும் விவசாயபொருட்களை வாங்க முன் வரவேண்டும் என கிணத்துக்கடவு உதவி வேளாண்மை இயக்குனர் வடிவேலு தெரிவித்துள்ளார்.

**மூங்கில் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 29,2011,03:14 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சிக்கு மூங்கில் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ள நிலையில், விற்பனை சரிந்துள்ளதால் மூங்கில் வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர்.கேரளாவிலிருந்து

மூங்கில் மரங்கள் பொள்ளாச்சிக்கு கொண்டு வரப்பட்டு விற்கப்படுகிறது. கடந்த 2002 - 03ல் ஒரு லோடு மூங்கில் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை விற்கபட்டது. தற்போது கேரளாவில் மூங்கில் மரங்களுக்கு மாற்றாக ரப்பர் மரங்களை அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.இதனால், மூங்கில் வரத்து குறைந்து விலை உயர்ந்துள்ளது. தற்போது ஒரு லோடு மூங்கில் ஒரு லட்சத்துக்கும் மேல் விற்கப்படுகிறது. பொள்ளாச்சி மூங்கில் வியாபாரிகள் கூறியதாவது: மூங்கில் மரங்கள் வளர்ந்து விளைச்சல் கிடைக்க ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால், நன்கு வளர்ந்த ரப்பர் மரங்களில் மாதம் ஒருமுறை பயன்பெற முடியும். மூங்கில் மரத்தை விட ரப்பர் மரங்கள் சாகுபடி செய்வதால் அதிக லாபம் கிடைப்பதால் கேரள மக்கள் ரப்பர் சாகுபடியில் அதிக கவனம் செலுத்த துவங்கியுள்ளனர்.ஆனாலும், மூங்கிலுக்கு எப்போதும் மக்களிடையே வரவேற்பு உள்ளது. மூங்கிலால் தயாரிக்கப்படும் கூடை, அலங்கார பொருட்கள் போன்ற சிறிய பொருட்கள் தயாரிக்கும் வியாபாரிகள் மூங்கில் விலை உயர்வால் பாதிப்படைந்துள்ளனர்.ஒரு லோடு மூங்கில் வந்தால், கூடை தயாரிக்கும் பணியாளர்கள் 1,000க்கும் மேற்பட்ட மூங்கில்களை வாங்குவார்கள். ஆனால் தற்போது கூடை தயாரிப்பவர்கள் மூங்கில் வாங்கும் அளவை குறைத்து விட்டனர். மூங்கிலுக்கு தட்டுபாடு ஏற்பட்டு விலை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் மூங்கில் விற்பனையும் சரிந்து விட்டதால், எதிர்காலத்தில் மூங்கில் தொழில் இல்லாமல் போய்விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது, என்றனர்.

**வேளாண் பல்கலையில் தேனீ வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 28,2011,02:36 IST

கோவை : தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு வேளாண் பல்கலையில் வரும் மே 6ல் நடக்கிறது. இதுகுறித்து,வேளாண் பல்கலை அறிக்கை:தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு வேளாண் பல்கலையில் வரும் மே 6ல் நடக்கிறது. தேனீ கூட்டங்களை கண்டுபிடித்து வளர்க்கும் முறை, தேனீ கூட்டங்களை சேர்த்து வளர்க்கும் முறை, ராணி தேனீ உற்பத்தி முறை, இயற்கை எதிரிகள் நிர்வாகம் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்படும். இதில் பங்கேற்க விரும்புவோர் வரும் மே 6ம் தேதி காலை 9.00 மணிக்குள் வேளாண் பல்கலை பூச்சியியல் துறையில் பதிவு செய்ய வேண்டும். பயிற்சி கட்டணம் 150 ரூபாய். கட்டணத்தை பயிற்சி நாள் அன்று செலுத்த வேண்டும். பயிற்சி நேரம், காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை. பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.விபரங்களுக்கு,"பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல்துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம், கோவை-641 003' என்ற முகவரியிலும் 0422: 661 1214 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## *பாலக்காடு அருகே அகளி பகுதிகளில் சிறுவாணியில் நீர்மட்டம் குறைவதால் குடிநீர் தட்டுப்பாடு*

*பாலக்காடு,ஏப்.29–*

*சிறுவாணி அணையில் நீர்மட்டம் குறைந்து வருவதால், கோவை மற்றும் கேரளாவில் உள்ள அகளி பகுதி பொதுமக்கள் அவதிப்படுகின்றனர்.*

*சிறுவாணி அணை*

*கேரள மாநிலம் பாலக்காடு அருகே உள்ள அகளி பகுதி மற்றும் கோவை நகருக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குவது சிறுவாணி அணை ஆகும். இந்த அணையில் கேரளாவில் மழை பெய்யும் காலமான தென்மேற்கு பருவமழை காலத்தில் சிறுவாணி அணைப்பகுதியில் அதிக அளவு மழை பெய்யும். வடகிழக்கு பருவமழை காலத்தில் குறைந்த அளவு மழை பெய்யும். கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை காலத்தில், போதிய மழை பெய்யாததால் இந்த அணையின் மொத்த நீர்மட்ட கொள்ளவான 878.50 மீட்டரை தொடவில்லை.*

*இருந்தாலும் ஓரளவு நிலைமை சமாளிக்கப்பட்டு வந்தது. தற்போது கோடைகாலம் தொடங்கி விட்டதால் சிறுவாணியின் நீர்மட்டம் தினமும் 10 சென்டிமீட்டர் வீதம் மள,மள என்று குறைந்து வருகிறது. சிறுவாணியின் சென்ற வாரம் நீர்மட்டம் 866.35 மீட்டராக இருந்தது. அணையில் இருந்து 862 மீட்டர்வரை தண்ணீர் எடுக்கலாம்.*

*குடிநீர் தட்டுப்பாடு*

*இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தும், சிறுவாணி அணையில் நீர்மட்டம் அதிகரிக்கவில்லை. தற்போது 878.50 மீட்டராக இருந்தது, நேற்று முன்தினம் 866.50 மீட்டராக குறைந்து விட்டது. ஆனால் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 870.94 மீட்டராக அணையின் நீர்மட்டம் இருந்தது.*

*நீர்மட்டம் குறைவதால் கோவை மாநகர், கேரளாவில் உள்ள அகளி பகுதியை சேர்ந்தவர்கள் குடிநீர் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். எனவே கோடையில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க, தமிழக, கேரள அரசு அதிகாரிகள் தீவிரமாக முயற்சி எடுத்து வருவதாக, அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

## ஏப்ரல் 16–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.76 சதவீதம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை
உணவு பொருள் பணவீக்கம் ஏப்ரல் 16–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 8.76 சதவீதமாக உள்ளது. முந்தைய வாரத்தில் 8.74 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து இரண்டு வாரங்களாக பணவீக்கம் உயர்ந்து வருகிறது.
உணவு பொருள்கள்
இந்தியாவில் மட்டுமின்றி, சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளிலும் உணவு பொருள்கள் விலை உயர்ந்து வருகிறது. இது, பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்த தவறினால், ஆசியாவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிப்பவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று ஆசிய மேம்பாட்டு வங்கி அண்மையில் தெரிவித்து இருந்தது.
இந்நிலையில் கோதுமை, பருப்பு வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்தி வியக்கத்தக்க வகையில் அதிகரிக்கும் என மத்திய அரசும், பாரத ரிசர்வ் வங்கியும் நம்பிக்கை தெரிவித்துள்ளன. இதனையடுத்து எதிர்காலத்தில் உணவு பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் ஓர் ஆண்டு அடிப்படையில் பழங்கள் விலை 28.43 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 12.14 சதவீதமும் அதிகரித்துள்ளது. வெங்காயம் (10.96 சதவீதம்), பால் (5.10 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்துள்ளது. அரிசி மற்றும் கோதுமை விலை முறையே 2.08 சதவீதம் மற்றும் 0.48 சதவீதம் உயர்ந்ததையடுத்து, தானியங்கள் விலை 4.49 சதவீதம் உயர்ந்துள்ளது.
பருப்பு வகைகள்
அதேசமயம் பருப்பு வகைகளின் விலை 6.49 சதவீதம் குறைந்துள்ளது. உருளைக்கிழங்கு

விலை 1.61 சதவீதமும், காய்கறிகள் விலை 0.21 சதவீதமும் குறைந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 13.05 சதவீதத்திலிருந்து 13.53 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## அமெரிக்க வேளாண் துறை மறுமதிப்பீடு இந்தியாவில், 2.40 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
இந்தியாவில், நடப்பு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) 2.40 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என அமெரிக்க வேளாண் துறை மறுமதிப்பீடு செய்துள்ளது. இது, முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் சற்று அதிகமானது என்றாலும், மத்திய அரசின் மதிப்பீட்டைக் காட்டிலும் (2.45 கோடி டன்) குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.
கரும்பு உற்பத்தி
அமெரிக்க வேளாண் துறை நம் நாட்டில் 2.36 கோடி டன் சர்க்கரை உற்பத்தி ஆகும் என முன்பு மதிப்பிட்டிருந்தது. எனினும் கரும்பு உற்பத்தி 34 கோடி டன்னாக அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் சர்க்கரை உற்பத்தி குறித்த மதிப்பீடுகளையும் தற்போது மாற்றி அமைத்துள்ளது.
நம் நாட்டில் மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் சர்க்கரை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. நடப்பு பருவத்தில் மகாராஷ்டிராவில் 93 லட்சம் டன் மற்றும் உத்தரபிரதேசத்தில் 62 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. இந்தியாவில் சென்ற ஆண்டு அக்டோபரிலிருந்து நடப்பாண்டு பிப்ரவரி வரையிலான காலத்தில் 1.63 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 1.37 கோடி டன்னாக இருந்தது என இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.
உற்பத்தி அதிகரித்து வருவதால் நடப்பு பருவத்தில் நம் நாடு 8 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது என அமெரிக்க வேளாண் துறை குறிப்பிட்டுள்ளது. மத்திய அரசு தற்சமயம் 5 லட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.
பயன்பாடு
சர்வதேச அளவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. எனினும் சர்க்கரை பயன்பாட்டில்

இந்தியாவே முதலிடத்தில் உள்ளது. உலகம் முழுவதுமாக 110–க்கும் மேற்பட்ட நாடுகளில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. உலகின் மொத்த கரும்பு உற்பத்தியில் பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் பங்களிப்பு 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 2011–12 பருவத்தில் நம் நாட்டில் 2.55 கோடி டன் சர்க்கரை உற்பத்தி ஆகும் என அமெரிக்க வேளாண் துறை முன்னறிவிப்பு செய்துள்ளது.

## இந்தியாவில் உரங்களுக்கு பற்றாக்குறை?



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
பூனா
கரீஃப் பருவம் (ஜூன்–அக்டோபர்) நெருங்கி வரும் நிலையில் சில முக்கிய உரங்களுக்கு பற்றாக்குறை ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக தென் மாநிலங்களில் உரப் பற்றாக்குறை அதிகம் உணரப்படும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
டீ.ஏ.பி. எனப்படும் டைஅம்மோனியம் பாஸ்பேட் உரத்திற்கான தேவை அதிகமாக உள்ளதால் பற்றாக்குறையும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. நம் நாட்டில் தேவைப்படும் மொத்த டீ.ஏ.பி. உரத்தில் 50 சதவீதம் இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பயிர்களின் விதைப்பு பருவத்தில் இந்த உரம் மிகவும் முக்கியமாக உள்ளது. பயிர் வளரும் பருவத்தில் யூரியா அதிகம் பயன்படுத்தப்படுகிறது.
நம் நாட்டில், எதிர்வரும் கரீஃப் பருவத்தில், உரங்களுக்கான தேவைப்பாடு 2.88 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 2.77 கோடி டன்னாக இருந்தது. ஆக, புதிய பருவத்தில் உரத் தேவை 4 சதவீதம் உயரும் நிலை உள்ளது.

தினகரன்

## உணவு பணவீக்கம் 8.76% ஆக உயர்வு

பதிவு செய்த நாள் 4/29/2011 1:52:15 AM



புதுடெல்லி: கடந்த 16ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.76 சதவீதமாக உயர்ந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 8.74 சதவீதமாக இருந்தது.
பழங்கள் மற்றும் புரதச் சத்து தொடர்பான உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் விலை அதிக அளவில் உயர்ந்ததே இதற்கு முக்கிய காரணம். பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் குறைந்து வந்த உணவு பணவீக்கம், கடந்த 2 வாரங்களாக தொடர்ந்து உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.
உணவு பணவீக்கம் உயர்ந்து வருவது பற்றி இம்மாத துவக்கத்தில் வருத்தம் தெரிவித்த பிரதமர் மன்மோகன்சிங், உணவுப் பொருட்கள் விலையைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## ரப்பர் கழக தொழிலாளர் தொடர் போராட்டம்

பதிவு செய்த நாள் 4/29/2011 1:54:02 AM



நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழக தொழிலாளர்கள் சம்பள உயர்வு குறித்த பேச்சு 5ம் முறையாக தோல்வியடைந்த நிலையில் போராட்டம் தொடர்கிறது.
குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தின்கீழ் 2,500 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசு ரப்பர் கழகம் தொழிலாளர்களின் புதிய சம்பளத்தை திருத்தி அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. கடந்த பிப்ரவரி 28ம் தேதி தொழிற்சங்கங்களும், தொழிலாளர் துணை ஆணையர் முன்னிலையில் இது குறித்து கையொப்பமிட்டன.

ஆனால், இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் மார்ச் 30ம் தேதி வரை உயர்த்தப்பட்ட ஊதியம் வழங்கப்படவில்லை. நிலுவை தொகையும் வழங்க பல கட்ட பேச்சு நடத்தியும், நிர்வாகம் உயர்த்தப்பட்ட ஊதியத்தையோ, நிலுவை தொகையையோ வழங்க முன்வரவில்லை. இதைத் தொடர்ந்து அனைத்து தொழிலாளர்களும் கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் 7ம் தேதி, 15ம் தேதி உட்பட 4 முறை பேச்சு நடத்தப்பட்டன. இதில் முடிவு காணப்படவில்லை. இந்நிலையில் நேற்று 5வது முறையாக பேச்சு நடந்தது. அதிலும் தீர்வு ஏற்படவில்லை. இதைத் தொடர்ந்து அரசு ரப்பர் கழக தொழிலாளர்கள் போராட்டம் நீடிக்கிறது. ஒரு மாதமாக அரசு ரப்பர் கழக தொழிலாளர்களின் தொடர் போராட்டத்தால் ரப்பர் பால்வெட்டு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.